திருத்திய புத்தகம்

# சைவ நெறி 2



கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

நல்லறம் அறிவான்ற தலைமுறை
நம் நாட்டிலே தோன்றிட
நம் மரசளிக்கும் கொடையிது
நல்வழி காட்டும் நல்லொளியாம் !

உங்கள் பின்வரும்
உடன்பிறவிகள் பொருட்டும்
உணர்வுடன் இதைப்பேணல்
உங்கள் கடனெனக் கொள்வீர் !

அறிவை வளர்த்திடச் சமவுரிமை
அனைவர்க்கும் வழங்கும் நோக்கில்
அரசு தரும் ஏடிதை
அக மகிழ்ந்து ஏற்றுடுவீர் !

நிச்சட் பதிறண
கல்வி, உயர்கல்வி அமைச்சர்.

(சி). தனுஞ் செய...
B 2ஆம் ஆண்டு,
யாழ்ப்பாணக் கல்லூரி

உ

சிவமயம்

# சைவ நெறி

## 2 ஆம் ஆண்டு

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

நூன்முகம்

1998 ஆம் ஆண்டுக்கென இந்நூல் மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது.

தயானந்த முதலிகே
பதில் கல்வி வெளியீட்டு ஆணையாளரும்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகமும்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
"இசுருபாய"
பத்தரமுல்லை.
1997.02.18

## முன்னுரை

சைவக் குழந்தைகள் அன்பே வடிவான கடவுளில் நம்பிக்கையை வளர்த்து அன்பின் வழி ஒழுகிச் சமயப் பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கும் பொருட்டு முதலாம் வகுப்புப் பாடத்திட்டத்துக்கமைய இப்பாட நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலை உருவாக்க உதவிய நூல் வெளியீட்டு உபகுழுவுக்கும் எழுத்தாளர்களுக்கும் ஓவியர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

எச். ஆர். சந்திரசேகர
ஆணையாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
புதிய செயலகம்,
மாளிகாவத்தை.
கொழும்பு 10.
1997.02.18

## குறிக்கோள்

1. கடவுள் நம்பிக்கையை வளர்த்தல்
2. கடவுள் அன்பின் வடிவமானவர் என்பதை அறியச் செய்தல்.
3. அன்புவழி நின்று சிந்தனை, சொல், செயல் என்பவற்றில் சமயப் பண்புகளை வளர்த்தல்.
4. எமது சமய பாரம்பரியத்தைப் பின்வரும் தலைப்புக்கள் மூலம் உணரச் செய்தல்.
   (அ) கடவுள் மூர்த்தங்கள்
   (ஆ) வீட்டிற் சமயம்
   (இ) சூழலிற் சமயம்
   (ஈ) முனிவர்கள். அடியார்கள்.

இந்நூல் கொழும்பு - 12, 115, மெஸஞ்சர் வீதியில்
அமைந்துள்ள தாளையன் பிரின்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் அச்சகத்தில்
அச்சிடப்பட்டுக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

97 / ෴ / 14 (40.000)

# பொருளடக்கம்


| பக்கம் | | பாடம் |
|---|---|---|
| 1. | கோயில் | 1 |
| 2. | ஆனைமுகன் | 2 |
| 3. | ஆனைமுகன் கதை | 3 |
| 4. | பிறைசூடிய பெருமான் | 7 |
| 5. | மாம்பழக் கதை | 11 |
| 6. | கடவுள் | 15 |
| 7. | சித்திரை வருடப் பிறப்பு | 16 |
| 8. | கோயிலுக்குப் போவோம் | 22 |
| 9. | திருநாவுக்கரசு நாயனார் | 27 |
| 10. | பிரகலாதன் | 32 |
| 11. | புறாவைக் காத்த அரசன் | 36 |
| 12. | பாடல்கள் | 41 |

உ

சிவமயம்


# கடவுள் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

தலையே நீவணங்காய் — தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய்

திருச்சிற்றம்பலம்

## 1. கோயில்



ஆலயந் தொழுவது சாலவும் நன்று


## 2. ஆனைமுகன்



தேங்காய் மோதகம் கொழுக்கட்டை
பாங்காய்ப் பலவும் படைத்திடுவோம்
பாடிப் பரவிப் பணிகின்றோம்
நாடிய வரங்களைத் தருவாயே

# 3. ஆறுமுகன் கதை





தேவர்கள் பரமசிவனிடம் வந்தார்கள்
'சுவாமி சூரன் எங்களை வருத்துகிறான் ; எங்களைக்
காப்பாற்றுங்கள் ' என்றார்கள்.



சுவாமி அவர்களிடம் இரக்கம் கொண்டார்.
நெற்றிக் கண்ணைத் திறந்தார். ஆறு தீப்பொறிகள்
தோன்றின. அவை சரவணப் பொய்கையில் விழுந்தன.
ஆறு குழந்தைகளாக மாறின.

சுவாமியும் பார்வதி அம்மையும் அங்கு வந்தார்கள். அம்மை ஆறு குழந்தைகளையும் கட்டி அணைத்தார். அவை ஒன்றாயின.






முருகன் தோன்றினார். முருகப்பெருமானே கந்தன். அவரே ஆறுமுகன்.




மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி

# 4. பிறைசூடிய பெருமான்



ஒருநாள் பிள்ளையார் நடனம் ஆடினார்.
சந்திரன் அதைப் பார்த்தான்.
அவனுக்குச் சிரிப்பு வந்தது.



கடவுளைப் பார்த்து நாம் சிரிக்கலாமா ?
சந்திரன் சிரித்தான்.

உடனே தேய்ந்து போகத் தொடங்கினான்.



சந்திரன் பயந்தான். சிவபெருமானிடம் ஓடினான். அவருடைய பாதங்களில் விழுந்தான்.



சிவபெருமான் அன்பே உருவானவர்.
அவர் சந்திரனைப் பார்த்து இரங்கினார்.
அவனைத் தூக்கித் தன் தலையில்
வைத்துக் கொண்டார். சந்திரனைத்
தேயாது காப்பாற்றினார்.
சிவபெருமான் ‘ சந்திரசேகர் ’ ஆனார்.

## 5. மாம்பழக் கதை



நாரத முனிவர் வந்தார்.




சிவபெருமானிடம் அவர் மாம்பழம் ஒன்றைக் கொடுத்தார்.





சிவபெருமான் பிள்ளையாரையும்
முருகனையும் பார்த்தார்.

‘ முதலில் உலகத்தைச் சுற்றி வருபவருக்கே
இந்த மாம்பழம் ’ என்றார்.



முருகன் மயில்மேல் ஏறினார்.
உலகத்தைச் சுற்றிப் பறக்கத் தொடங்கினார்.
பிள்ளையார் அம்மை அப்பரைச் சுற்றி வந்தார். உலகைச் சுற்றி வந்தேன் என்று வணங்கினார்.
மாம்பழம் அவருக்கே கிடைத்தது.


# 6. கடவுள்



கடவுள் ஒருவர் இருக்கிறார்.
கடவுள் எங்கும் இருக்கிறார்.
கடவுள் எல்லாம் அறிவார்.
கடவுள் எல்லாம் வல்லவர்.
கடவுள் இரக்கம் உடையவர்.
கடவுள் நம்மைக் காக்கிறார்.
கடவுளை ஒருகாலமும் மறவாதே.
கடவுளை எந்நாளும் வணங்கு.

— பாலபாடம் —

# 7. சித்திரை வருடப் பிறப்பு



சித்திரை வருடப் பிறப்பு வந்துவிட்டது. வீட்டைக் கழுவ்வோம்.
முற்றத்தைக் கூட்டுவோம். மருத்துநீர் வைத்து நீராடுவோம்.
புதிய ஆடை அணிவோம்.




அப்பா வாசலுக்கு மாவிலை கட்டுகிறார்.
அம்மா வாசலில் கோலம் போடுகிறார்.
ஆனந்தனும் கமலாவும் கூடையிலே
பூக்கள் கொண்டு வருகிறார்கள்.




அம்மா சர்க்கரைப் பொங்கல் பொங்குகிறார்.


பாட்டி வடையும் முறுக்கும் சுடுகிறார்.



புதுவருடத் திருநாளில் எல்லோரும்
கூடிக் கடவுளை வணங்குவோம்.



பெரியோரை வணங்குவோம்
கைவிசேடம் பெறுவோம்




பகிர்ந்து உண்போம்




பட்டாசு கொளுத்துவோம்.

# 8: கோயிலுக்குப் போவோம்



அப்பா : சிவன் கோயில் மணி ஓசை கேட்கிறது. பூசைக்கு நேரமாகிவிட்டது. எல்லோரும் குளித்து விட்டீர்கள்தானே. வாருங்கள் கோயிலுக்குப் போவோம்.

கமலா : அம்மா, தட்டத்தில் தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, கர்ப்பூரம் எல்லாம் எடுத்து வைத்துவிட்டார். இதோ வருகிறோம்.



அப்பா : கால்களைக் கழுவுங்கள்.

அம்மா : இந்தத் தேங்காயையும் கழுவு.


பழத்தை நான் கழுவுகிறேன்.




அப்பா : கோபுரத்தைப் பாருங்கள்.

தலைமேல் கைகூப்பிக்

கும்பிடுவோம்.






அப்பா : இதோ நந்தி, பலிபீடம்,
கொடிமரம் கொடி மரத்திற்கு
முன்னே விழுந்து கும்பிடுங்கள்.




ஐயர் தீபம் காட்டுகிறார். தலைமேல்
கைகூப்பிக் கும்பிடுவோம்.

# 9. திருநாவுக்கரசு நாயனார்






திருநாவுக்கரசு நாயனார் வயிற்று வலியால் மிகவும் வருந்தினார். தம் அக்காவான திலகவதியாரிடம் சென்றார். ' தம்பி கோயிலுக்குப் போவோம் வா ' என்றார் அக்கா. இருவரும் கோயிலுக்குச் சென்றார்கள்.



தம்பி, இந்தா திருநீறு. நெற்றியிலே
பூசிக்கொள். சுவாமியை விழுந்து
வணங்கு ’ என்றார் அக்கா.



‘ கடவுளே இந்த வயிற்று வலியைத் தாங்க முடியவில்லையே ’ என்று திருநாவுக்கரசர் அழுதார். திருநீற்றைப் பூசினார். தேவாரம் பாடினார். அவருடைய வயிற்றுவலி மறைந்தது. அந்தத் தேவாரத்தை நாமும் பாடுவோம்.

# தேவாரம்





திருச்சிற்றம்பலம்

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
　கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே இரவும் பகலும்
　பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
　குடரோ டுதுடக்கி முடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
　வீரட் டானத் துறைஅம் மானே.

திருச்சிற்றம்பலம்

# 10. பிரகலாதன்

இரணியன் என்று ஓர் அரசன் இருந்தான். அவன் கடவுளை மறந்து வாழ்ந்தான். 'நானே கடவுள், என்னையே வணங்குங்கள்' என்று அவன் கட்டளை இட்டான்.



இரணியனுடைய மகன் பிரகலாதன்.
அவன் கடவுளை மறக்கவில்லை.
' நாராயணா, நாராயணா '
என்று பாடுவான் ;
கும்பிடுவான்.




இரணியனுக்குக் கோபம் வந்தது. மகனைக் கூப்பிட்டான்.

' யார் இந்த நாராயணன் ? எங்கே இருக்கிறான் ? '

என்று இரணியன் கேட்டான்.

' நாராயணன் எங்கும் இருக்கிறார் '

என்றான் பிரகலாதன்.



' இந்தத் தூணில் இருப்பானா ? ' என்று இரணியன் கேட்டான்.

' அவர் தூணிலும் இருப்பார் ; துரும்பிலும் இருப்பார் '

என்றான் பிரகலாதன்.

இரணியன் கோபத்துடன் சிரித்தான்.
தூணைக் காலால் உதைத்தான்.
தூண் பிளந்தது.



அப்பொழுது நாராயணன் நரசிங்கராக வெளியே வந்தார். பிரகலாதன் அவரை வணங்கினான். நரசிங்கர் இரணியனை உதைத்தார். இரணியன் விழுந்தான்.

# 11. புறாவைக் காத்த அரசன்



சிபி ஓர் அரசன். ஒரு நாள் ஒரு புறா
அவனது காலடியிலே வந்து விழுந்தது.
அது பயத்தால் நடுங்கியது. அரசன்
புறாவைக் கையில் எடுத்தான் ; அதை அன்போடு தடவினான்.




அப்பொழுது மேலே பறந்து வந்தது
ஒரு பருந்து.
' இது எனது உணவு, என்னிடம் கொடுத்து
விடு ' என்று பருந்து அரசனைக் கேட்டது.




இல்லை. ' இதை நான் காப்பாற்ற
வேண்டும் ' என்றான் அரசன்.
' எனக்குப் பசிக்கிறது. புறாவிற்குப் பதிலாக
உன் உடம்பிலிருந்து தசையை வெட்டித்
தருவாயா ? ' என்று கேட்டது பருந்து.



‘ தருகிறேன் ’ என்றான் அரசன். தராசின் ஒரு பக்கத்தில் புறாவை வைத்தான். தனது உடம்பிலிருந்து ஒரு துண்டு தசையை வெட்டினான். தராசின் மறுபக்கத்தில் வைத்தான்.”



புறாவின் பாரம் அதிகமாக இருந்தது.
அரசன் ஆச்சரியம் அடைந்தான்.
தானே தராசில் ஏறி நின்றான். அப்போது
தராசு சமமாக நின்றது.





அந்த நேரத்தில் அங்கு ஓர் அதிசயம் நடந்தது. திடீரெனப் புறாவும் பருந்தும் மறைந்தன. சிபியின் உடல் முன்போல் ஆகியது. அங்கே இந்திரனும் அக்கினிக் கடவுளும் தோன்றினார்கள்.


அரசே எல்லா உயிர்களிலும் நீ அன்பு வைத்திருக்கிறாய். உன்னைப் போலவே எல்லோரும் அன்புள்ளவர்களாக வாழட்டும் என்று வாழ்த்தி மறைந்தார்கள்.

# 12. பாடல்கள்



## பாப்பாப்பாட்டு

பொய் சொல்லக் கூடாது பாப்பா — என்றும்
புறஞ் சொல்லல் ஆகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா — ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா
துன்பம் நெருங்கி வந்த போதும் — நாம்
சோர்ந்துவிடல் ஆகாது பாப்பா
அன்பு மிகுந்த தெய்வ முண்டு — துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா
சாதிகள் இல்லையடி பாப்பா — குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்த மதி கல்வி — அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்
உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மை என்று தானறிதல் வேணும் ;
வயிரம் உடைய நெஞ்சு வேணும் — இது
வாழும் முறைமையடி பாப்பா



# ஆத்தி சூடி

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே



1. அறஞ் செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி
9. ஐயம் இட்டுண்
10. ஒப்புர வொழுகு
11. ஓதுவது ஒழியேல்
12. ஔவியம் பேசேல்

# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே புலித் தோலையரைக் கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன் றையணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல் லால்இனி யாரை நினைக்கேனே.

திருச்சிற்றம்பலம்

# திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.

முதலாம் பதிப்பு 1979
இரண்டாம் பதிப்பு 1980
மூன்றாம் பதிப்பு 1982
நான்காம் பதிப்பு 1983
ஐந்தாம் பதிப்பு 1984
ஆறாம் பதிப்பு 1985
ஏழாம் பதிப்பு 1986
எட்டாம் பதிப்பு 1987
ஒன்பதாம் பதிப்பு 1988
பத்தாம் பதிப்பு 1989
பதினோராம் பதிப்பு 1990
பன்னிரண்டாம் பதிப்பு 1991
பதின்மூன்றாம் பதிப்பு 1992
பதின்நான்காம் பதிப்பு 1993
பதினைந்தாம் பதிப்பு 1994
பதினாறாம் பதிப்பு 1995
பதினேழாம் பதிப்பு 1996
பதினெட்டாம் பதிப்பு 1997
எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

பாட நூல் உபகுழு
திரு. ந. சண்முகரத்தினம்
திருமதி பராசக்தி சுந்தரலிங்கம்
கலாநிதி வே. இராமகிருஷ்ணன்
திரு. செ. வேலாயுதபிள்ளை
திருமதி பாலம் லக்ஷ்மணன்
திரு. சி. முருகவேள்

எழுத்தாளர் குழு
திருமதி புவனேஸ்வரி அருணாசலம்
திருமதி மனோன்மணி நாகநாதன்
திருமதி பரமேஸ்வரி அழகரத்தினம்
திருமதி பத்மா சோமகாந்தன்
திரு. க. சி. சண்முகம்
திரு. கு. குருசுவாமி

ஓவியர்
திரு. ஆசைப்பிள்ளை ஞானசேகரம்

பிரதம பதிப்பாசிரியர்
திரு. ஐ. தம்பிமுத்து
(இ. ச. நி. சே. தரம் 1)

சைவநெறிப் பாடங்கள் எழுதுவதற்கு நூலகத்தைத் தந்து
உதவிய இராமகிருஷ்ண மடம் சுவாமிகளுக்கு
எமது மனமார்ந்த நன்றி உரித்தாகும்.

நம் நாட்டு இளஞ்சந்ததியினரின் நலன்கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரங்களுக்கு வழங்கத்தக்கமுறையிற் கவனமாக வைத்துப் படிக்க.

பாடசாலைப் பெயர் ......................................

| | மாணவர் பெயர் | ஆண்டு | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 1998 | | | |
| 1999 | | | |
| 2000 | | | |
| 2001 | | | |
| 2002 | | | |
| 2003 | | | |

சமயம்

கம்பு

கொழும்பு